

யாழ்ப்பாணம் – ஊர்காவற்துறை – கரம்பொன் காளி கோவிலடியில்
உதித்து வாழ்வாங்கு வாழ்ந்து தற்போது திருநெல்வேலி
பத்திரகாளி அம்மன்வீதி வாசகியாக விளங்குபவரும்
அமரர் சோமசுந்தரம் ஆச்சாரியாரின்பிரியபத்தினியுமான



அமரர்

# சோமசுந்தரம் சிவயோகம்

அவர்களின் நினைவாக மலரும்

# சிவயோக தீபம்

21.10.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹா
ஓம் காமாட்சி எனும் காளிகாதேவி திருத்தாள் போற்றி



யாழ்ப்பாணம் - ஊர்காவற்துறை - கரம்பொன்
காளி கோவிலடியில் உதித்து வாழ்வாங்கு வாழ்ந்து
தற்போது திருநெல்வேலி பத்திரகாளி அம்மன்வீதி
வாசகியாக விளங்குபவரும் அமரர் சோமசுந்தரம்
ஆச்சாரியாரின்பிரியபத்தினியுமான

அமரர்

# சோமசுந்தரம் சிவயோகம்

## அவர்களின் சிவசாயுச்சிய பேறு குறித்த
## சிவயோக தீபம்

21.10.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

*அன்பின் ஊற்றாய் பண்பின் சிகரமாய்*
*ஆசைக்கு அம்மா என்றழைத்து*
*எமையெல்லாம் வாழ வைத்து*
*பாசத்தால் உச்சி முகர்ந்து*
*உலகுக்கோர் உன்னத வழிகாட்டியாய்*
*ஊர் போற்றும் உத்தமியாய்*
*எமை வாழ வைத்த தெய்வமாய்*
*ஏணி போல் நின்று எமை உயர்த்திய எம்*
*அன்புத் தெய்வத்துக்கு இந்நூல் சமர்ப்பணம்*

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

காமாட்சி, காளிகாதேவி, சொரூபினி, விஸ்வகர்மினி,
காயத்திரி எனும் ஐம்முகத் தமிழ்ச்செல்வி
தாமரைத் தாள்கள் போற்றி



விண்ணிலிருந்து
மண்ணில் வாஸ்துவாய்
முகிழ்வு
30.10.1936

மண்ணிலிருந்து
விண்ணில் வாஸ்துவுடன்
அமிழ்வு
05.10.2022

அமரர்

# சோமசுந்தரம் சிவயோகம்

## திதி நிர்ணயம்

ஆண்டு சுபகிருது கன்னித் திங்கள் பனேழும்நாளில்
பூண்ட பூர்வபக்க தசமி திதியதுவே - புகழ்
மாண்தரு சிவயோக மாதரசி - ஒளிமிகும் ஆடலான்
பாதமலர் அடைந்தார் என்றே - குறி
கன்னிமாதம் - புரட்டாதித் திங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# தோத்திர திரட்டு

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடி கணபதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே!.

### *தேவாரம்*

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே

### *திருவாசகம்*

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உவப்பிலா ஒன்றே !
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே !
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே !
சித்தத்துள் தித்திக்கும் தேனே !
அளிவளர் உள்ளத்(து) ஆனந்தக் கனியே !
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி யீசற்காட்
செய்மின் குழாம்புகுந்
தண்டங்கடந்த பொருள்அள வில்லதோர்
ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள் என்றே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலையில்

பொன்பூத்த நிறமாய னிலமிடத்து மறிவருதாட்புனித மூர்த்தி
மன் பூத்த திருமேனி மேவியுய ரைந்தொழிலு மகிழ்வினாற்றி
மின் பூத்த வடியர்வினை யொழித் தொழியா வின்பரவ மேவி வாழ்ந்த
தென்பூத்த வருள் சுரக்கும் விச்சுவநாயகி மலர்ந்தாள் சென்னி சேர்ப்போம்
(விஸ்வப் பிரம்ம புராணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *திருப்புகழ்*

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக ணடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

## *வாழ்த்து*

மறையொடு சைவம் வாழ்க மாநிலம் செழித்து வாழ்க
கறைமிடற்று அண்ணலார் அடியவர் இனிது வாழ்க
பொறையொடும் வாய்மை போற்றி புவியினில் மாந்தரெல்லாம்
பிறை தவழ் சடையனாரின் அருளினால் நீடு வாழ்க!

திருச்சிற்றம்பலம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமசுந்தரம் சிவயோகம் (மணி) அவர்களின்

## வாழ்க்கைத் தடப்பதிவுகள்...

தமிழ் கலை முதல்வன் மயவிஸ்வகர்மனின் பெயரால் இன்று வட மொழியில் விளங்கும் சூரிய சித்தாந்தம் என்ற வானியல்நூலில் அன்றைய நாவலந் தண் பொழிலின் நடுவன் மேகலா ரேகையில் (பூ மந்திய கோட்டில்) உள்ள நான்கு நகரங்களில் ஒன்றாகக் கூறப்படும் இலங்காபுரியை (ஆதி மாந்தை மாநகரம்) த் தன்னகத்தே கொண்ட இலங்கைத் திருநாட்டின் வடபால் விளங்கும் யாழ்ப்பாணத் தீபகற்பகத்தில் சப்த தீவுக் கூட்டங்களில் உள்ள வேலனை - ஊர்காவற்துறை ப் பகுதிகளில் உள்ள புளியங்கூடல், செந்நெல் விளை கரம்பொன் ஆகியன இரு திருவூர்களாகும்.

புளியங்கூடலில் ஐந்தொழில் வேள்வியை அவனியுய்ய ஆக்கிவரும் விஸ்வகர்மபிராம்மண மரபுத்திவர்தான் வேலாயுதம் எனும் திருமகன். அவருக்கு காளைப்பருவம் வந்துற்ற வேளை அவர் தம் பெற்றோர் கரம்பொன்னில் காமாட்சி எனும் காளிகாபுவனேஸ்வரி அன்னை இவர்ந்துறையும் ஆலயத் திருவீதியின் மருங்கே அருவாளர் மரபுதித்த அழகமர் திருமகள் இலட்சுமி எனும் மங்கை நல்லாளை இவற்கேற்ற வதுவென வரித்து நல்ல ஓரையில் மணவினை கண்டு மகிழந்தனர்.

வேலாயுதத் திருமகனும் இலட்சுமி எனும் திருமகளும் இல்லறம் எனும் நல்லறத்தில் இணைந்ததன் பயனாய் பரஞ்சோதி எனும் ஆண்மகவு முதற் தோன்ற அவர் பின்னவளாய் ஆயிரத்து தொழ்ழாயிரத்து முப்பத்தாறாம் ஆண்டு பத்தாம் மாதம் முப்பதாம் நாளுக்கு நேரான ஐப்பசித் திங்களின் (துலை மாதம்) குறித்த நன்னாளில் ஓர் பெண்மகவு தோன்றியது. பெற்றோர் அகமகிழ்ந்தனர். அத் திருமகளுக்கு சிவயோகம் எனும் திருநாமம் சூட்டினர் தாய் தந்தையர் அச்சுந்தர மகளுக்கு.

சிவயோகச் செல்விக்கு பின்னவர்களாக நடராசா, அப்புத்துரை என்ற இரு முத்தான ஆண் மைந்தர்கள் தோன்றினர். தமையனுடனும் தன் இளவல்கள் இருவருடனும் நம் நினைவுக்குரிய தங்க மகள் இன்பமுடன் வளர்ந்து வருகின்றார். கல்வி கேள்விகளிலும் சிறந்து விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் சிவயோகத்தின் தமையனான பரஞ்சோதி, பரமேஸ்வரி, நங்கையை கடிமணம் புரிய அவர்கள் வழியே மருமக்களைக் கண்டு மகிழ்ந்தார் சிவயோகம்.

இன்னார்க்கு இன்னார் என இறைவன் எழுதிவிட்டார் என இயம்புவர் பெரியோர். அந்த வகையில் மணிபல்லவம் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் நாகநயினாதீவில் கண்ணாளர் மரபில் தோன்றிய வேலுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதிகளுக்கு பராசக்தி, சோமசுந்தரம், நாகலெட்சுமி, ஐயாத்துரை, துரைராஜா, மகேஸ்வரி, கனகராசா, கமலேஸ்வரி ஆகிய பிள்ளைச் செல்வங்கள் தோன்றி விளங்கினர்.

நற்குணம், தயை நிரம்பிய சிவயோகம் கன்னிக் கருவம் கடிதென வந்துற பெற்றோர் நயினாதீவு வேலுப்பிள்ளை பொன்னம்மா தம்பதியிரின் இரண்டாவது மகனான சோமசுந்தரத்தை மங்கைக்கேற்ற மணாளன் எனத் தேர்ந்தனர். சோமசுந்தரம் கலை பல பயின்று தம்மரபுக்குரிய பஞ்ச கிருத்தியத்தில் சொற்றொழிலில் சிறந்து விளங்கினார். சிவயோகம் சோமசுந்தரம் மங்கல மன்ற விழா இனிது நடைபெற்றது. உற்றார், உறவினர், நண்பர்கள் வாழ்த்த வளத்துடன் வாழ்ந்தனர் சிவயோகம் - சோமசுந்தரம் தம்பதியர்.

"மங்கலம் என்ப மனையாட்சி மற்றதன்

நன்கலன் நன்மக்கட் பேறு" என்று செந்நா போதர் திருவள்ளுவனார் திருக்குறளில் கூறியதற்கிணங்க சோமசுந்தம் - சிவயோகம் தம்பதியர்க்கு வனதாசன் என்ற முதல் மகன் தோன்ற, அன்னவனுக்கு பின்னவனாக குகதாசன் என்ற இளைய திருக்குமாரனும் தோன்றினார். இவ்விருவர் பின்னே புஸ்பராணி எனும் முதன் மகளும் பிறந்து அகமகிழ, கடைக்குட்டி செல்வத் திருமகளாய் வந்த ராணியும் நல்லதொரு குடும்பத்தின் நான்கு தூண்களென வந்துறவே சிந்தை மகிழ்ந்தனர் பெற்றோர்.

நல்லதோர் குடும்பம் பல்கலைக்கழகம் எனப் பூத்துக்குலுங்கிய வனதாசன் என்ற தலைமகனும் குகதாசன் என்ற இளைய திருமகனும்கலை பல கற்றுத்தேர்ந்து கைவினைத் தொழிலும் முதனிலை பெற்று காலதேச வர்த்தமானம் வழியே. திரைகடலோடியும் திரவியம் தேடு எனும் முது மொழிக்கு இணங்க சுவிஸ்லாந்து தேசத்தில் குடியேறி தொழிலாற்றி வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் முன்னே சோமசுந்தரத்தின் தமக்கையார் பராசக்தி, திருநாவுக்கரசு (கரம்பொன்) எனும் காளையை கடிமனம் புரிய அவர் வழியே மருமக்களையும், நாகலெச்சுமி எனும் இளைய நங்கை நமசிவாயம் (யாழ்ப்பாணம்) பெருமனம் கொள்ள அவர் வழியே திருமருகர்களையும், ஐயாத்துரை என்ற இளவல் பூபதி என்ற மங்கையை வதுவையாற்றிட அவர்கள் வழியே பெறாமைந்தர்களையும், துரைராசா என்ற தனையன் (தம்பி) இராசம்மா என்ற கன்னிகையை கடிமனம் கொள்ள அவர்தம் வழியிலும் பெறாமைந்தர்களை பெற்று பேருவகை கொண்டனர் சோமசுந்தரம் சிவயோகம் தம்பதியினர்.

கனகராசா என்ற கடைக்குட்டி கடிமனம் காணமுன்பு காளைப் பருவத்தே குடும்பத்தார் கலங்க இறைவன் கழல் சிலம்ப கடுகி விரைந்தார்.

இதற்கிடையில் சிவயோகம் என்னும் மணியென்று செல்லமாக அழைக்கப்படும் இத்திருமகளின் இளவல் நடராசா தர்மலட்சுமி எனும் தர்மமகளை தாரமாகத் இல்லறத்தவமியற்ற அவர்கள் வழியேயும் மருமகன் – மருமகள்களை கண்டு உவகை கொண்டனர்.

சோமசுந்தரத்தின் நேரிழையாள் இளைய தங்கை கமலேஸ்வரி என்ற கன்னிகை சிவயோகத்தின் கடைக்குட்டி இளவல் அப்புத்துரை எனும் காளைக்கு கடிமனம் இயற்றி குடும்ப உறவையும் கடிதென இறுக்கி அவர்கள் கண்ணே மருக்கட்கு தாய்மாமன் அத்தையென தாம் மகிழ்ந்து நின்றனர் நிற்க.

தம் மூத்த மகள் புஸ்பராணி என்னும் தங்க மகளுக்கு சிவயோகம் தம் தமையன் என உறவின் வழி வந்த முத்துக்குமாரு புஸ்பவதி மகன் பால சிங்கத்தை மனாளன் என வரித்து கடிமணம் புரிவித்து மகிழ்ந்து அவர்கள் வழியே பவித்திரா, ஜிவித்திரா, துஷாந், பவதாரணி என்ற பேரச் செல்வங்களை பெற்று மகிழந்து அவர்களுடனே உடனுறைந்தனர் பெற்றோர்.

மூத்த திருமகன் வனதாசனுக்கு மாவிட்டபுரம் தர்மலிங்கம், திருநெல்வேலி பேரானந்தம் தம்பதியிரின் இளைய திருக்குமாரி செந்திருவன்ன தமயந்தி நங்கையை கரணமாற்றி அவர்கள் வழியே திஷாந், சோவன்ஜா என்ற இரு பேரக்குழந்தைகளை கண்டு மகிழந்தார் சிவயோகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய திருமகன் குகதாசன் தமக்கு சில்லாலைபதி வாழ் முத்தையா அன்னலட்சுமி தம்பதியரின் இளைய திருமகள் பூமகள் அன்ன பொலிந்த திருமகள் விஜயா மங்கை பாரியெனக்கண்டு பாரறிய மணம் பரவி மகிந்தனர் அன்னவர் வழியே அருமந்த பேரராய் லக்ஷன், லக்ஷிகா அனைத்து அகமகிழ்ந்தார் மணி.

இளைய திருமகள் பார்வதியன்ன வசந்த ராணியை திருநெல்வேலி நல்லநாதன் மீனாட்சியம்மா தம்பதியரின் மூத்த குமாரான் நகுலேஸ்வரன் தன்னை வரன் எனக் கண்டு வதுவையாற்றி அவர்தம் வழியே சுவைஸ்ரன், ஹீரா என்னும் பேரர்கள் பெற்று மகிழ்ந்தார்.

சிவயோகம் தம்வழி, தன் துணைவர் வழி, தம்மைந்தர் வழி, நட்பு வழி, உறவு வழி, உறவை எல்லாம் உவந்து மகிழும் உத்தம குணம் கொண்ட மாதரசி.

துடிப்பு, அயரா முயற்சியும், அன்னலர்ந்த செந்தாமரை மன்ன மகிழ் திருமுகமும் கொண்ட அன்னை, தம்மைந்தர், உறவினர்களை வாரி அணைத்து அன்பு பொழிய இலண்டன், சுவிஸ்சர்லாந்து போன்ற நாடுகளுக்கு எல்லாம் சென்று வந்தார்.

கரம்பொன்னிலே காமாட்சி கொடுபினி காளிகா தேவியாக உறையும் அதிசக்தியை சிந்தையில் ஏத்தி தினம் பரவுவார் அன்னை. நித்திய கருமம். நியமத்துடன் முடித்து, திருநெல்வேலியில் சிம்மவாகினி பத்திரகாளி அவன் மைந்தன், தலங்காவல் மூத்த விநாயகரையும் பரவும் பணிவு கொண்டவர் சிவயோகம்.

காலவொட்டம் சுழன்றோட பேத்தி பவித்திராவுக்கு ஸ்ரீகரன் எனும் திருமகன் தன்னுடன் மணவினை கண்டு லக்ஷகி என்னும் பீட்டியையும், மகன் வழிப் பேரன் திசாந்துக்கு தர்சினி எனும் திருமகளைமனைவியாகக் கண்டு வைஸ்ணவி எனும் பீட்டியையும் கண்டார். ஜிவித்திரா எனும் திருமகளை ரூபகரன் எனும் வரணை மணாளனாகக் கண்டு வதுவையாற்றி சாருஜா, துவானா எனும் பீட்டிகளையும் கண்டு உவகை கொண்டார்.

மைந்ததர், மருகர், பேரரர், பீட்டர், சோதரர், மைத்துனர், பெறாமைந்தர் வழிப் பேரர், பேத்தியர் என பெரு விருட்சத்தின் ஆணிவேராய் அகலக்கால் பரப்பி நின்ற எம் அன்னை சிவயோகம் எல்லோராலும் மணியக்கா என அன்புடன் அழைக்கும் அன்னை உடல் தளர்ந்து நோயது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாட்ட கட்டிலே தஞ்சமென சில நாட்கள் உறவுகளை கவலையில் ஆழ்த்தி இருந்தார்.

மகாசக்தியின் மகாரவழி உற்சவத்தின் நிறைவு நேரம் 04.10.2022ல் இரவு உடல் நலம் மோசமடைந்து நள்ளிரவு வேளை பாய்கலை பாவை பார்வதி, காளியின் விஜயதசமி கூடிய வேளையில் 05.10.2022 (ஆங்கில நாள்) கன்னி மாதம் 17ம் நாள் திருவோண நட்சத்திரமும் கூடிய நேரத்தில் மைந்தர், மருகர், பேரர், உடன் பிறந்தார், மைத்துனர், உறவினர், நண்பர்கள் குலைந்தழ அகண்ட பேரொளியான காயத்திரி அம்மை சகித ஐந்தமிழ் வேந்தர், ஐஞ்சிவன், ஆடல் வல்லான், விஸ்வகர்ம பரமசிவன் பாதயபங்கயம் பற்றினார் பூதவுடல் நீக்கி சோமசுந்தரம் சிவயோகம் அம்மையார்.

அன்னாரின் ஆன்மா சாந்தியடைவதாக!

சாந்தி! சாந்தி! சாந்தி!!!

பேதமை என்று சொல்லப்படுவது எதுவென்றால்
ஒருவர் தனக்கு கேடுதரும் செயற்பாடுகளை
மேற்கொண்டு நன்மை தரும் செயற்பாடுகளை
விட்டு விடுவது தான்

திருவள்ளுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்



திருச்சிற்றம்பலம்

தொல்லையிரும் பிறவி சூழும் தளைநீக்கி
அல்லல் அறுத்து ஆனந்த மாக்கியதே
எல்லை மறுவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசக மேன்னும் தேர்.

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறந்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசன்அடி போற்றி எந்தை அடிபோற்றி
தேசன்அடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன்அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரார் பெருந்துறைநம் தேவன்அடி போற்றி
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன்அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயஉரைப் பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங் கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழும் ஆறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்
செல்லா நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்துஅகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யாயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்றமறை யோனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கறந்தபால் கன்னலோடு நெய்கலந்தால் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட முடியா மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்துஎங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசம்ஆம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தைபெருமானே
கூர்த்த மெஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கு அரிய நோக்கே நுணுக்கு அரிய நுண்ணுணர்வே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கும் வரவும் புணர்வும்இலாப்புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரியபேரொளியே
ஆற்றுஇன்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறேவந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோருக்கும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சகலகலா வல்லி மாலை

ஆய கலைக ளறுபத்து நான்கினையு
மேய வுணர்விக்கு மென்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

படிக நிறமும் பவளச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும் - துடியிடையும்
அல்லும் பகலு மனவரத முந்துதித்தாற்
கல்லுஞ்சொல் லாதோ கவி.

வெண் தாமரைக்கு அன்றி நின் பதம்
தாங்க என் வெள்ளை உள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொலோ
சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க வொழித்தான் பித்தாக
உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய் தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய் பங்கயாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைப் பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்
அமுதுதார்ந்து உன் அருட் கடலில்
குளிக்கும் படிக்கென்று கூடும் கொலொ
உளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த
கல்வியும் சொற் சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்ய
பொற்பாத பங்கேருகம் என்
நெஞ்சத் தடத்து அலராது
என்னே நெடுந்தாட் கமலத்
தஞ்சத் துவசம் உயர்த்தோன்
செந்நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத்தவி சொத்திருந்தாய்
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொல் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளிது எய்த
நல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலும் அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளால்
பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற் பனமும் அவதான
முங்கவி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்து அடிமை
கொள்வாய் நளினாசனஞ்சேர்
செல்விக்கு அரிது என்றொரு
காலமும் சிதையாமை நல்கும்
கல்விப் பெரும் செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கும் உயிரா
மெய்ஞ் ஞானத்தின் ஒற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார் நிலந்தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோடு
அரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்கண்ட வெண்குடைக்
கீழாக மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்ட அளவிற் பணியச்
செய்வாய் படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி
உண்டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகல கலாவல்லியே.

## வாழ்க்கை

வாழ்க்கை ஒரு சவால் – அதனை சந்தியுங்கள்
வாழ்க்கை ஒரு பரிசு – அதனை ஏற்றுக்கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு சாகசப்பயணம் – அதனை மேற்கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு சோகம் – அதனை கடந்து வாருங்கள்
வாழ்க்கை ஒரு துயரம் – அதனை தாங்கிக்கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு கடமை – அதனை நிறைவேற்றுங்கள்
வாழ்க்கை ஒரு விளையாட்டு –அதனை விளையாடுங்கள்
வாழ்க்கை ஒரு வினோதம் –அதனை கண்டறியுங்கள்
வாழ்க்கை ஒரு பாடல் – அதனை பாடுங்கள்
வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் – அதனை பயன்படுத்தி கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு பயணம் – அதனை முடித்து விடுங்கள்
வாழ்க்கை ஒரு உறுதிமொழி – அதனை நிறைவேற்றுங்கள்
வாழ்க்கை ஒரு காதல் – அதனை அனுபவியுங்கள்
வாழ்க்கை ஒரு அழகு – அதனை ஆராதியுங்கள்
வாழ்க்கை ஒரு உணர்வு – அதனை உணர்ந்து கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு போராட்டம் – அதனை எதிர்கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு குழப்பம் –அதனை விடை காணுங்கள்
வாழ்க்கை ஒரு இலக்கு –அதனை எட்டிப்பிடியுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொன்றை வேந்தன்

அகர வரிசை

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆலயம் தொழுவது சாலவு நன்று
இல்லற மல்லது நல்லற மன்று
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்
உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்
ஏவா மக்கண் மூவா மருந்து
ஐயம் புகினுஞ் செய்வன செய்
ஒருவனைப் பற்றி யோரகத் திரு
ஓதலி னன்றே வேதியர்க் கொழுக்கம்
ஔவியம் பேசுத லாக்கத்திற் கழிவு
(ஃ)அஃகமுங் காசுஞ் சிக்கெனத் தேடு

க – வரிசை

கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை
காவ றானே பாவையர்க் கழகு
கிட்டா தாயின் வெட்டென மற
கீழோ ராயினுந் தாழ வுரை
குற்றம் பார்க்கிற் சுற்ற மில்லை
கூரம் பாயினும் வீரியம் பேசேல்
கெடுவது செய்யின் விடுவது கருமம்
கேட்டி லுறுதி கூட்டு முடைமை
கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி
கொற்றவ னறித லுற்றிடத் துதவி
கோட்செவிக் குறளை காற்றுட னெருப்பு
கௌவை சொல்லி னெவ்வருக்கும் பகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச – வரிசை

சந்ததிக் கழகு வந்திசெய் யாமை
சான்றோ ரென்கை யீன்றோட் கழகு
சிவத்தைப் பேணிற் றவத்திற் கழகு
சீரைத் தேடி னேரைத் தேடு
சுற்றத்திற் கழகு சூழ விருத்தல்
சூதும் வாதும் வேதனை செய்யும்
செய்தவ மறந்தாற் கைதவ மாளும்
சேமம் புகினும் யாமத் துறங்கு
சையொத் திருந்தா லைய மிட்டுண்
சொக்க ரென்பவ ரத்தம் பெறுவர்
சோம்ப ரென்பவர் தேம்பித் திரிவர்

த – வரிசை

தந்தைசொன் மிக்க மந்திர மில்லை
தாயிற் சிறந்தொரு கோயிலு மில்லை
திரைகட லோடியுந் திரவியந் தேடு
தீராக் கோபம் போரா முடியும்
துடியாப் பெண்டிர் மடியி னெருப்பு
தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்
தெய்வஞ் சீறிற் கைதவ மாளும்.
தேடா தழிக்கிற் பாடா முடியும்
தையும் மாசியும் வையகத் துறங்கு
தொழுதூண் சுவையி னுழுதூ ணினிது
தோழ னோடு மேழைமை பேசேல்

ந – வரிசை

நல்லிணக்க மல்ல தல்லற் படுத்தும்
நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை
நிற்கக் கற்றல் சொற்றிறம் பாமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரகம் பொருந்திய வூரகத் திரு
நுண்ணிய கருமமு மெண்ணித் துணி
நூன்முறை தெரிந்து சீலத் தொழுகு
நெஞ்சை யொளித்தொரு வஞ்சக மில்லை
நேரா நோன்பு சீரா காது
நைபவ ரெனினு நொய்ய வுரையேல்
நொய்யவ ரென்பவர் வெய்யவ ராவர்
நோன்பென் பதுவே கொன்று தின்னாமை

ப - வரிசை

பண்ணிய பயிரிற் புண்ணியம் தெரியும்
பாலோ டாயினுங் கால மறிந்துண்
பிறன்மனை புகாமை யறமெனத் தகும்
பீரம் பேணி பாரந் தாங்கும்
புலையுங் கொலையும் களவுந் தவிர்
பூரியோர்க் கில்லை சீரிய வொழுக்கம்
பெற்றோர்க் கில்லை சுற்றமுஞ் சினமும்
பேதைமை யென்பது மாதர்க் கணிகலம்
பையச் சென்றால் வையந் தாங்கும்
பொல்லாங் கென்பவை யெல்லாந் தவிர்
போனக மென்பது தானுழந் துண்டல்

ம - வரிசை

மருந்தே யாயினும் விருந்தோ டுண்
மாரி யல்லது காரிய மில்லை
மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை
மீகாம னில்லா மரக்கல மோடாது
முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்
மூத்தோர் சொன்ன வார்த்தை யமிர்தம்
மெத்தையிற் படுத்த னித்திரைக் கழகு
மேழிச் செல்வம் கோழை படாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைவிழி யார்தம் மனையகன் றொழுகு
மொழிவது மறுக்கி னழிவது கருமம்
மோன மென்பது ஞான வரம்பு

வ – வரிசை

வளவ னாயினு மளவறிந் தழித்துண்
வானஞ் சுருங்கிற் றானஞ் சுருங்கும்
விருந்திலோர்க் கில்லை பொருந்திய வொழுக்கம்
வீரன் கேண்மை கூரம் பாகும்
(வு)உரவோ ரென்கை யிரவா திருத்தல்
(வூ)ஊக்க முடைமை யாக்கத்திற் கழகு
வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை
வேந்தன் சீறி னாந்துணை யில்லை
வையந் தோறுந் தெய்வந் தொழு
(வொ)ஒத்த விடத்து நித்திரை கொள்
(வோ)ஓதாதார்க் கில்லை யுணர்வொடு மொழுக்கம்

## பாரதியின் தமிழ் கவிதை

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்;
பாமர ராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு,
நாமமது தமிழரெனக் கொண்டுஇங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்

- நீ எதை நினைக்கிறாயோ அதுவாக ஆகிறாய் உன்னை வலிமை உடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவன் ஆவாய்.

- நாங்கள் கடவுளின் குழந்தைகள் அழியாத பேரின்பத்தின் பங்குதாரர்கள், புனிதமும் பூரணத்துவமும் பெற்றவர்கள்.

- "நான் எதையும் சாதிக்க வல்லவன்" என்று சொல் நீ உறுதியுடன் இருந்தால் பாம்பின் விஷம் கூட சக்தியற்றதாகி விடும்.

- நீ தூய்மை உள்ளவனாக இருந்தால் வலிமை உள்ளவனாக இருந்தால் நீ ஒருவனே உலகிலுள்ள அத்தனை பேருக்கும் சமமானவனாவாய்.

- மரணம் வரும் வரையிலும் வேலை செய். நான் உன்னுடன் இருக்கிறேன். நான் இறந்த பிறகும் என் ஆவி உன்னுடன் இருந்து வேலை செய்யும்.

- உன் நிலை எப்படிப்பட்டதாக இருந்தாலும் அதைக் குறித்து நீ கவலைப்பட வேண்டாம். லட்சியத்தைப் பற்றிக் கொண்ட முன்னேறியபடியே இரு.

- உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒரு போதும் நினைக்காதே. அப்படி நினைப்பது ஆன்மீகத்திற்கு முற்றிலும் முரண்பட்டது.

- தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும். இவை அனைத்திற்கும் மேலாக அன்பு வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன் நவிலல்



*"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"*

எமது குடும்ப மேன்மைக்கு வாழ்ந்து வழிகாட்டிய குடும்பத்தலைவி அணையா விளக்கு

**அமரர் சோமசுந்தரம் சிவயோகம்**

அவர்களின் பிரிவுத்துயர் செய்திகேட்டு ஓடோடி வந்து உதவிகள் வழங்கி எம்முடன் இணைந்து துயரினில் பங்குபற்றிய உற்றார், உறவினர், நண்பர்கள், அன்புள்ளம் கொண்ட அனைவருக்கும் மற்றும் தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்த அன்பர்களுக்கும் இறுதி தகனக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் கிரியைகளின் போது பரமன் புகழ் பாடியவர்களிற்கும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொண்ட அனைத்து அன்பர் களுக்கும் மேலும் இந்நினைவு மலரை சிறப்பு உருவாக்கியவர்களுக்கும், அம்மலரை குறுகிய காலத்தில் பதிப்புத் தந்த பதிப்பகத்தாருக்ம் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


**இங்ஙனம்**
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

**அம்மன் வீதி,**
**திருநெல்வேலி கிழக்கு,**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம்சாவழி

*வேலாயுதம் + *இலட்சுமி

- *பரஞ்சோதி + *பரமேஸ்வரி
  - இராஜேஸ்வரி
  - கிருபாகரன்
  - ஜெகதீஸ்வரி
  - கரன்
  - கருணாகரன்
- சிவயோகம்
- நடராசா + தர்மலட்சுமி
  - மீனா
  - பதி
  - தர்மராசா
  - கல்பனா
  - ஜீவன்
  - றாயு
- *அப்புத்துரை + கமலேஸ்வரி
  - றாஜி
  - பிரஜீன்
  - கார்த்தீபன்

கனகராசா

கமலேஸ்வரி + *அப்புத்துரை
- றாஜி
- பிரதீபன்
- கார்த்தீபன்

- புஸ்பராணி + பாலசிங்கம்
  - ஜிவித்திரா + ரூபகரன்
    - சாருஜா
    - துவானா
  - துஷாந்
  - பவதாரணி
- வசந்தராணி + நகுலேஸ்வரன்
  - சுவைஸ்ரன்
  - ஹீரா

* அமரத்துவம் எய்தியவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Guru Printers. 021 221 4777

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org